# சிறுவர் பாடல்கள் ஓர் நுண்ஆய்வு: தரம் 5 வரையான நூல்களை அடிப்படையாகக் கொண்டது

**Paunanthie, MRA* & Rasanayagam, J**

**ஆய்வுச் சுருக்கம்**

*சிறுவர் இலக்கியம் பற்றிய ஆய்வுகள் பலதளங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கலாம். சிறுவர் இலக்கியங்களில் சிறுவர் பாடல்கள் முக்கியமானவை. பிள்ளைகள் ஆடிப்பாடி மகிழ்ச்சியாக இருப்பதற்கு இவை வழிவகுக்கின்றன. பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புப் பிள்ளைகளின் (தரம் 1 - 5 வரை) கற்பித்தலின்போது இவை முக்கிய பங்குவகிக்கின்றன. தமிழ் கற்பித்தலின்போது மட்டுமின்றி ஏனைய பாடங்களைக் கற்பிக்கும்போதும் சிறுவர் பாடல்கள் பலவேறு வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இந்நோக்கிற்காக அவர்களுக்கான பாடப் புத்தகங்களிலும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் சிறுவர் பாடல்கள் பல காணப்படுகின்றன. இப்பாடல்கள் சிறுவர்களின் வயது, மொழி, உளவளர்ச்சி போன்றவற்றுக்குப் பொருத்தப்பாடுடையனவாக அமையவேண்டும். குறிப்பாக அப்பாடல்களின் பாடுபொருள் பிள்ளைகளின் அனுபவத்துக்கு உட்பட்டவையாக அமையவேண்டும். அந்தவகையில், ஆரம்ப வகுப்பு நூல்களில் உள்ள சிறுவர் பாடல்களின் பாடுபொருள் பற்றியும், அவற்றைப் பாடுவதற்குக் கையாளும் மொழியின் பொருத்தப்பாடு பற்றியும் நோக்குவது அவசியமாகின்றது. இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. சிறுவர் பாடல்கள் சிறுவர்களுக்கானவையாக இருப்பினும் அவற்றை ஆக்குபவர்கள் சிறுவர் பராயத்தைத் தாண்டியவர்களாகவே உள்ளனர். சிறுவர்களுக்கும் அவர்களுக்கான பாடல்களை ஆக்குபவர்களுக்கும் இடையில் அனுபவ முதிர்ச்சி, மொழி ஆளுமை என்பன வேறுபடுகின்றன. அவர்கள் பாடல்களை ஆக்கும்போது சிறுவர்களின் அனுபவ எல்லைக்குள் நின்று பாடவேண்டியது அவசியம். அவ்வாறு பாடப்படும் பாடல்களே பயன்மிக்கன. இந்த அடிப்படையில் குறிப்பிட்ட வகுப்பு பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளில் உள்ள சிறுவர் பாடல்கள் ஆய்வு செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட இந்த நோக்கில் இவை இதுவரை ஆய்வுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். இவைபற்றி ஆய்வு செய்யவேண்டிய தேவை எழுகின்றது. ஆய்வு செய்யப்படுகின்றபோது அவை ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தலுக்குத் துணையாகவும் அமையும். அத்தோடு எதிர்காலத்தில் சிறுவர் பாடல்களை ஆக்குபவர்களுக்கும் துணையாக அமையும். தரம் 5 வரையான வகுப்புக்களின் பாடப் புத்தகங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் இந்த ஆய்வுக்கான முதல்நிலை மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்த ஆய்வு, விவரண ஆய்வுமுறை மற்றும் பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பிட்ட சிறுவர் பாடல்கள் அவற்றின் விவரணங்களை நோக்கித் தொகுத்தும் பகுத்தும் வியாக்கியானம் செய்யப்படுகின்றன.*

**பிரதான சொற்கள்:** *சிறுவர் பாடல்கள், நுண்ஆய்வு, தரம் 5 வரையான நூல்கள்*

To whom correspondence should be addressed: nanthie@gmail.com

*Lecturer, Kopay Teachers' College.